[1994 மே 4

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளிங்கராயன் வாய்க்கால் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காளிங்கராயன் அணைக் கட்டிலிருந்து ஆற்றின் வலதுபுறம் பிரிந்து, ஏறத்தாழ 16,000 ஏக்கர் பதிவு பெற்ற பாசன நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்படுகிறது. இந்த 66 கிலோ மீட்டர் வாய்க்காலையும் சீரமைக்க, அதில் 787 மதகுகள் இருப்பதால், அந்த 787 மதகுகளை 226 மதகுகளாக மாற்றி அமைக்கின்ற திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்த போது, விவசாயிகளின் கடும் எதிர்ப்பு காரணமாக அந்தப் பிரச்சினை கைவிடப்பட்டது. அன்-ஆதரைஸ்டாக தண்ணீரை எடுக்கின்றவர்களைப் பொறுத்த மட்டில் அரசு ஒருபோதும் அனுமதி அளித்தது கிடையாது. ஆகவே கடைக்கோடி பகுதிகளுக்குக்கூட இதுமாதிரி பிரச்சினை வருகிற போது நியாயமான ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவேதான் நம்முடைய அரசின் சார்பில் அது சம்பந்தமாக முறைப்படுத்தப்படாத நீர் இறைக்கும் அளவில் தண்ணீர் எடுக்கிறவர் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அது சம்பந்தமாக பொதுப் பணித் துறை மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகளுக்கு ஆணை இடப்பட்டிருக்கிறது. அவர்கள் அது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். பொதுவாக முறைப்படுத்தப்படாத அளவில் தண்ணீர் எடுக்கிறவர்களை இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது. அதற்கு இந்த அரசு எந்த விதமான இடமும் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 508, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

508—

திருத்துறைப்பூண்டி—மன்னார்குடி வரை தார்ச்சாலையை அகலப்படுத்துதல்.

* 14013—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் — காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி முதல் மன்னார்குடி வரையுள்ள குறுகிய தார்ச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

1994 மே 4]

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கே இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி வரையில் உள்ள சாலை அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோன்று மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி வரையிலும் அங்கே குறுகிய சாலையாக இருக்கிறது. சாலையின் இரு பக்கமும் பள்ளமும் படுகுழியுமாக இருக்கிறது. அதே நேரத்தில், திருத்துறைப்பூண்டியிலிருந்து வேதாரண்யம் வரையிலும் இரு வழிப் பாதையாக சாலைகள் அகலப்படுத்தப்பட்டு அதுவும் நன்றாக இருக்கிறது. இதிலே இருக்கிற கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் மட்டும் குறுகிய பாதையாக இருக்கிற காரணத்தால் ஆயிரத்திற்கு மேற்பட்ட உப்பு வண்டிகள், சவுக்கு லாரிகள் தினந்தோறும் அங்கே அதிகமாகப் போய்க் கொண்டிருப்பதால், பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. கீழே உள்ள இறக்கங்களில் வண்டிகளை இறக்கி மீண்டும் போக முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதை பிரதானமாகப் பரிசீலித்து நடப்பு ஆண்டில் இந்தப் பணியைத் துவங்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி — திருத்துறைப் பூண்டி சாலை என்பது ஏறத்தாழ 28.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். அதிலே 2.6 கி.மீ. சாலை இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதமுள்ள 25.6 கி.மீ. சாலையை மேம்படுத்துவதற்கு ஏறத்தாழ 7 மீட்டர் அளவில் அகலப்படுத்த 1 கோடியே 70 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அது தவிர, 6 இடங்களில் பாலங்கள் கட்டுவது — மணல்போக்கி ஆற்றில் 30 மீட்டர் நீளம் பாலம் கட்டுவது, முள்ளியாற்றில் பாலம் கட்டுவது, பாமணி ஆற்றில் பாலம் கட்டுவது மற்றும் இதுபோன்ற செலவினங்களைக் குறித்து ஆய்வு செய்கிறபோது, ஏறத்தாழ 4 கோடியே 10 லட்சம் ரூபாய் உள்ளிட்டு 5 கோடியே 80 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே இருக்கின்ற நிதியாதாரங்களைப் பொறுத்தமட்டிலே அந்த சாலைக்கு 5 கோடியே 80 லட்சத்தை ஒதுக்குவதற்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தால்தான் இக்கேள்விக்கு இடம் இல்லை என்று

[1994 மே 4

சொன்னேன். ஆனால் மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி சாலை என்பது நீண்ட நாட்களாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிற சாலை. மிகவும் அதிக மான தொகையை அரசு ஒதுக்க வேண்டியிருக்கிற காரணத் தாலேதான் இந்தச் சாலையை இருவழிச் சாலையாக மாற்று வதற்கு இப்போது வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அரசு எதிர்காலத்திலே இந்தத் திட்டம் குறித்து பரிசீலிக்கலாம் என்று கருதுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி சாலை நிதிநிலை காரணமாக உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. வருகின்ற காலத்திலே அது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தச் சாலைகளை சீரமைக்க 5 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்கின்ற காரணத்தால் வரு கின்ற காலத்திலே பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். 5 கோடி ரூபாயையும் ஒரே நேரத்தில் செலவழிப்பதற்கு முடியா விட்டாலும், படிப்படியாக அந்தச் சாலையை 5 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் என்று எடுத்துக் கொண்டு செப்பனிடுவதற்கும், மன்னார்குடியில் பாமணி ஆற்றின் குறுக்கே கீழ்ப்பாலம் என்ற இடத்தில் கட்டியிருக்கின்ற பாலம் ஒருவழிப் பாதையாக இருப்பதால், மன்னார்குடியிலிருந்து செல்கின்ற பஸ் கள் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிற காரணத் தால், அந்தச் சாலையை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக முதற் கட்டமாக பாமணி ஆற்றுப் பாலத்தை புதிய அகலமான பால மாகக் கட்டித் தருவதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பாமணி ஆற்றின் குறுக்கே 65 மீட்டர் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஏற்கெனவே நான் தெரி வித்ததைப் போல, மிகக் குறுகிய நிதி ஆதாரம் என்று சொன் னால், உடனடியாக அந்தத் திட்டங்களை எடுத்துச் செய்வ தற்கு வழிவகை இருக்கிறது. ஆனால், கோடிக்கணக்கான ரூபாய் என்று வருகிறபோது, உடனடியாக அந்தத் திட்டங்களை அரசு எடுப்பதற்கு வாய்ப்பு இல்லாத காரணங்களினாலேதான், இப்படிப்பட்ட திட்டங்களிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படு கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு, முன்னதாகவே பாலம் கட்டப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான பிரச்சினை. இது குறித்தும், முதலிலே இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும், அதைப் போல ஃபேஸ் ஓர்க் 28 கிலோமீட்டரையும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல படிப்படியாக ஒவ்வொரு ஆண்டிற்கு 5 கிலோ மீட்டர் என்ற அளவிலே எடுத்தால் கூட, ஒரு நான்கு ஆண்டுகளிலே அந்தச் சாலையை போட்டுவிட முடியும் என்ற அடிப்படையிலே தான், எதிர்காலத்திலே ஃபேஸ் ஓர்க்காகவும், இந்தப் பெரிய பாலத்தைக் கட்டுவதற்கும் உரிய திட்டத்தை அரசு மிக விரைவிலே பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 509, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

509—

மத்திய மாநில அரசுகள் விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகள் விவரம்.

*20741—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய, மாநில அரசுகள் அளிக்கின்ற சலுகைகளை விவசாயிகள் நன்கு அறிந்து கொள்ள அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே தகுந்த ஏற்பாடு செய்துள்ளது. வேளாண்மைத் துறையில் உழவர் மேம்பாட்டுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வழங்கும் உதவிகள் கொண்ட தொகுப்பு புத்தக வடிவில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது அனைத்து உறுப்பினர்களுக்கும் இச்சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டது. அதனைப் போல உழவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு ஏற்கெனவே அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட, நம்முடைய